பக்கங்கள் : நான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 16 புதன்கிழமை (28.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 95

# ராஜதந்திரிகளை ஏற்றிச் சென்ற ஹெலிகள் மட்டு. நகரில் இறங்கியபோது ஷெல் வீச்சு!

## இத்தாலியத் தூதர், படையினர் உட்பட 12 பேர் காயம்! அமைச்சர் சமரசிங்கவும் அமெ. தூதரும் அருந்தப்பு!!

கொழும்பு, பெப்ரவரி 28

மனித உரிமைகள் விவகார அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் வெளிநாட்டு ராஜதந்திரிகள், சர்வதேச தொண்டர் அமைப்பின் பிரதிநிதிகள் அடங்கிய உயர் மட்டப் பிரதிநிதிகளை ஏற்றிச் சென்ற இரண்டு ஹெலிக்கொப்டர்கள் நேற்றுக்காலை மட்டக்களப்பு நகரின் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள 'வெபர்' மைதானத்தில் தரையிறங்கிய சமயம் அப்பகுதி மீது ஷெல்வீச்சு நடத்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்கத் தூதர் றொபேர்ட் ஓ பிளேக் மற்றும் அமைச்சர் சமரசிங்க ஆகியோர் இத்தாக்குதலின்போது அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இத்தாலி நாட்டின் இலங்கைத் தூதரும், ஜேர்மன் நாட்டுத் தூதரக அதிகாரியும் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர். அதிரடிப் படையினர், விமானப் படையினர் உட்பட வேறு பத்துப் பேரும் காயமடைந்தனர்.

இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, வெளிநாட்டு இராஜதந்திரிகள், ஐக்கிய நாடுகள் நிறுவன அதிகாரிகள் மற்றும் உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய 21பேர் அடங்கிய குழுவினருடன் நேற்றுக்காலை விமானப்படைக்கு சொந்தமான இரண்டு ஹெலிக்கொப்டர்களில் மட்டக்களப்புக்குச் சென்றனர்.

இவர்கள் சென்ற ஹெலிக்கொப்டர்கள் நேற்றுக்காலை 8.35 மணிக்கு மட்டக்களப்பு விமானப்படைத் தளத்தின் அருகே 'வெபர்' மைதானத்தில் தரையிறங்கியபோது இந்த மோட்டார்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

ஹெலிக்கொப்டர்களில் சென்றவர்களுள் சிலர் தரையிறங்கிவிட்டனர். மேலும் சிலர் இறங்கிக்கொண்டிருந்தனர். இந்தச் சமயத்திலேயே பெரும் சத்தத்துடன் ஷெல் குண்டுகள் விழுந்துள்ளன.

**அமைச்சர் ஹெலியின் உள்ளே இருந்தார்**

இவ்வேளையில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஹெலிக்கொப்டரின் உள்ளே இருந்துள்ளார். அமைச்சர் சென்ற விமானத்தில் இருந்து இறங்கியவர்கள் காயமடைந்த போதும் அமைச்சர் ஹெலியின் உள்ளே இருந்ததால் காயங்கள் எதுவும் இன்றி தப்பினார் என அமைச்சர் குழுவில் சென்ற வெளிவிவகார அமைச்சின் ஊடகப்பணிப்பாளர் ரவினாத் சூரியசிங்க தெரிவித்தார்.

இத்தாக்குதல் இடம்பெற்றபோது விமானப்படைத் தளத்தில் ஏற்கனவே தரை இறங்கிய தனியார் விமானம் ஒன்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தாக்குதல் இடம்பெற்றஇடம் அதியுயர்

(03 ஆம் பக்கம் பார்க்க)

# ராஜதந்திரிகளின் உயிர்களை அரசே பேராபத்தில் சிக்கவைத்ததாக விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

## தாங்களே தாக்குதல் நடத்தினர் என்பதையும் ஒப்புக்கொள்கின்றனர்

கொழும்பு, பெப்.28

மட்டக்களப்பு இராணுவ மையத்தில் இராஜதந்திரிகள் வந்திறங்கிய ஹெலிக்கொப்டர்ஷெல்தாக்குதலுக்கு இலக்கானமை தொடர்பாகத் தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ள விடுதலைப்புலிகள், இராஜதந்திரிகள் விடயத்தில் - வழமையாக - பொதுவாக - பின்பற்றப்படும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்கத்தவறி, அவர்களின் உயிர்களை பேராபத்துக்குள் இலங்கை அரசு சிக்கவைத்திருக்கிறது என்றும் குற்றம் சுமத்தியுள்ளதோடு அதற்காகக் கடும் கண்டனமும் வெளியிட்டிருக்கின்றனர்.

இராஜதந்திர நடைமுறைகளைப்பின்பற்றாமல், இராஜதந்திரிகளை இராணுவ மையத்துக்குள் உள்ள பீரங்கி ஏவுதளங்களுக்கு அரசுத்தரப்பு கூட்டி வந்திருப்பதாகப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

''பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக கிளிநொச்சியில் எங்களோடு தொடர்பு பட்டு செயற்படும் ஐ.நா. அதிகாரியான மரைன், வெளிநாட்டு இராஜதந்திரிகள் பீரங்கித்தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றமை குறித்து எங்களுக்குத் தகவல் தந்த கையோடு - உடனடியாகவே - நாங்கள் எமது தாக்குதலை நிறுத்தி விட்டோம்.'' - என்றார் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன்.

''சினமூட்டும் பீரங்கித் தாக்குதல்கள் இடம்பெறும் இப்போதைய சூழலில், இராஜதந்திரப் பிரதிநிதிகள் குழுவை அத்தகைய பீரங்கி ஏவுதளப் பகுதிக்குக் கூட்

(03 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் காவலில் இருந்த 'சிங்களப் புலி' மர்மமரணம் நாலாம் மாடியில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு, பெப். 28

விடுதலைப் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் கொழும்பு கோட்டை பொலிஸ் தலைமையகத்தின் நான்காம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு சிங்களவர்களில் ஒருவர் மர்மமான முறையில் நேற்று மரணமடைந்திருக்கிறார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

உயிரிழந்தவர் தம்மிக என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தப் பின்னணியிலேயே நேற்று அவர்களில் ஒருவர் மர்மமான முறையில்

(02 ஆம் பக்கம் பார்க்க)

# அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்ல புலிகளின் அனுமதி பெறத் தேவையில்லை

## அரச இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 28

அரசகட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு நாங்கள் செல்வதற்கு புலிகளின் அனுமதி கேட்க வேண்டிய அவசியம் எமக்கில்லை.

- இவ்வாறு இலங்கை இராணுவத்தின் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது-

தமக்கு அறிவிக்காமல் வெளிநாட்டு இராஜதந்திரிகள் பயணம் செய்தனர் என புலிகள் தெரிவித்திருக்கும் கருத்து அர்த்தமற்றது.

தாக்குதல் சம்பவம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியான மட்டக்களப்பு நகரில் நடந்துள்ளது. விடுதலைப் புலிகளுக்கு மட்டக்களப்பு நகரில் எதுவித கட்டுப்பாட்டுப் பகுதியும் கிடையாது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அதிகாரிகள் செல்வதென்றால் புலிகளுக்கு அறிவிக்கவேண்டிய அவசியம் எமக்கில்லை.

இதேவேளை, புலிகள் தாக்குதல் நடத்தியவேளை இராணுவ முகாம்கள் எதுவும் இருக்கவில்லை. மட்டக்களப்பு நகரில் பொலிஸ் மற்றும் அதிரடிப்படையினர் மட்டுமே உள்ளனர். காரணம் சொல்ல வேண்டும் என்பதற்காக புலிகள் இக்கருத்தை வெளியிட்டிருக்கின்றனர். அதனை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

கிளிநொச்சிக்குச் செல்லவேண்டுமென்றால் சமாதான செயலகம் ஊடாகத் தகவல் அனுப்புவோம். ஆனால், இது அரசகட்டுப்பாட்டுப் பகுதி. அங்கு நாம் செல்வதற்கு எவரும் தடை செய்யமுடியாது - என்றார்.

# அரசும், புலிகளும் கடமைகளை உணர்ந்து சம நிலையில் நடந்துகொள்ளவேண்டும்

## கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் கருத்து

கொழும்பு, பெப். 28

''அரசும், புலிகளும் தமது கடமைகளை உணர்ந்து ஒரு சம நிலையில் நடந்து கொள்ள வேண்டும்''

- இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் பேச்சாளர் தொமினுர் ஒமர்சன் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் பயணம்செய்த ஹெலிக் கொப்டர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக பி.பி.ஸிக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

''தாக்குதல் நடந்த சில மணிநேரத்தில் அப்பகுதிக்குச் சென்ற எமது கண்காணிப்பாளர்கள், அங்கு நேற்று முழுநாளும் தங்கியிருந்தனர்.

''அரச தரப்பில் இராணுவத்தினருடனும், சில வெளிநாட்டுத் தூதுவர்களுடனும், அதன் பின்னர் கிளிநொச்சியிலுள்ள கண்காணிப்பாளர்களுடாக விடுதலைப் புலிளுடனும் இது குறித்துப் பேசியுள்ளோம். இத்தாக்குதல் சம்பவம் பற்றி நாங்கள் இன்னும் விசாரணைகளை முடிக்கவில்லை. இதனால், எந்த முடிவிற்கும் வரவில்லை.

இச்சம்பவமானது துரதிர்ஷ்டவசமான சம்பவமாகும். இத் தாக்குதலின்போது 15 பேர் காயமடைந்திருப்பது ஒரு மோசமான நிகழ்வாகும். இவ்வாறான சம்பவங்கள் மோதல்கள் மேலும் தொடர்வதற்கு ஏதுவாக அமையாதென நாங்கள் நம்புகின்றோம்.

போர்நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டுள்ள இரு தரப்பினருடமும் நாம் ஒன்றை தெளிவாகக் கூறியுள்ளோம். அதாவது, உங்கள் இரு தரப்பினர்களுக்குமிடையேதகவல்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டுமானால் அதற்கு உதவ நாங்கள் தயாராகவுள்ளோம் என்பதாகும்.

இச்சம்பவத்திற்குப்பிறகு அவர்களுக்கு உதவத்தான் இங்கு நாங்கள் இருக்கிறோம் என்பதை நினைவூட்ட விரும்புகிறோம் - என்றார்.

# அதிபராகப் பதவியேற்கச் சென்றவர் கிளைமோர்த் தாக்குதலில் பலியானார்

## விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில்

கிளிநொச்சி, பெப்.28

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மன்னார், விளாத்திக்குளத்தில் ஆழ ஊடுருவும் படையணி நேற்று நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் பாடசாலை அதிபர் ஒருவர் கொல்லப்பட்டார்.

விளாத்திக்குளம் பாடசாலையின் அதிபராகப்பொறுப்பேற்க [illegible] யிலேயேசிலுவைராசாஅமலநேசன் (வயது 33) என்பவர்கிளைமோர்த்தாக்குதலில்அகப்பட்டு மரணமானார். அவருடன் மோட்டார் சைக்கிளில் சென்ற கோட்டக் கல்வி அதிகாரி ராஜக்கோன் (வயது 47) படுகாயமுற்றார்.

பாடசாலைக்கு அருகில் வைத்து நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இத்தாக்குதல் [illegible] தெரிவிக்கப்பட்டது.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

திரு.திருமதி இராஜலக்ஷ்மன் - வதனவாணி தம்பதிகளின் தவப்புதல்வி **திலக்ஷி** தனது பிறந்தநாளை பாட்டாவின் இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரைப் பப்பா, மம்மி, மற்றும் பாட்டா, Grand mammy, நிரோ சித்தா, பிரான்சில் வசிக்கும் சுரேஷ் பெரியப்பா, பெரி அன்ரா, ராஜு பெரியப்பா, சின் அன்ரா, சுவிஸ் ஆசைப்பப்பா, ஆசையன்ரா, அண்ணாமார், அக்காமார், தம்பி றித்திக் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(58652)

36, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

தகவல்: நிரோ சித்தா

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்திருக்கின்றார் என்று தெரிவிக்கப் படுகிறது. இந்த நால்வரில் ஒருவரான தம்மிக என்பவர் நாலாம் மாடியின் மலசல கூடத்தில் உயிரிழந்து கிடக்கக்காணப் பட்டார் என்று ஒரு செய்தி தெரிவித்தது. இவர்தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார் எனப் பொலிஸ் தரப்புக் கூறுகின்றது.

நேற்றுக்காலை 10 மணியளவில் இவர் மலசலகூடத்தில் இறந்து கிடந்தமைகண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# 47ஆம் நாள் நினைவலைகள்

## குமாரசாமி தயாபரன்

(இராசன்)

தோற்றம் 18-12-1965 மறைவு 13-01-2007

எங்கள் இதயத்தில் இறவாமல்
எங்கள் இல்லத்தில் இறையாகி
எம்மை வழி நடத்தும் அப்பாவே!
உம்மைத் துதித்திருப்போம் யாமே.

இனுவில் மேற்கு, இனுவில்.

(58211)

என்றும் உங்கள் நினைவாக
மனைவி, பிள்ளைகள்.

# The Jaffna Education Centre
## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

நாதன்ஸ் தியேட்டருக்கு அருகில்
(மேல் மாடியில் வலது பக்கம்)

Spoken English with Grammar
சிங்களம்
Shorthand Typing

ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம் நாளை (01.03.2007)

ஆசிரியை இ.லோகநாயகி

# நியந்தரீ அறிவித்தல்

பின்வரும் பரீட்சைகளில் தோற்றி முதற் தடவையில் சித்திபெற்ற அந்தண மாணவர்கள் உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேற்றுச் சான்றிதழ்களுடன் தமது விவரங்களை "செயலாளர், நியந்தரீ, சிவன்கோவில், நல்லூர்" எனும் முகவரியில் 10.03.2007 இற்கு முன்னதாக சமர்ப்பிக்கவும்.

| பரீட்சை | ஆண்டு |
|---|---|
| 1. க.பொ.த சா/த | - 2005 |
| 2. க.பொ.த உ/த | - 2006 |
| 3. 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை | - 2006 |

சிவன்கோவில், நல்லூர். செயலாளர்.

# வீடு வாடகைக்கு

யாழ்.மாநகர எல்லைக்குள் நகரை அண்மித்த பலாலி வீதியில் அமைந்துள்ள பெரிய வீடு வாடகைக்கு உண்டு. அரச ஊழியர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உகந்தது. தொடர்பு - 0777374726

(58208)

# 31ஆம் நாள் நினைவு கூரல்

எமது கல்லூரி ஆசிரியர் செ.கு.ரேஷ் அவர்களின் அன்புத் தாய்

## திருமதி செல்வராஜா செல்வராணி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

(58411)

# NSIA - New Zealand

சர்வதேச அங்கீகாரம் பெற்ற பாடநெறிகளான

- Hospitality Management (80 Weeks)
- Professional Cookery (40 Weeks)
- Food & Beverage (20 Weeks)

IELTS 5.5 தேர்ச்சி பெற்ற மாணவர்கள் குறைவு புரிதலான மேற்படிப்பை இலகுவாக புலமையாக விண்ணப்பங்களை கவனத்தில் எடுக்கப்படும்.

**Work & Study**

கல்வி கற்கும் காலத்தில் தொழில் புரியும் வாய்ப்பு.
நியூசிலாந்தில் நிரந்தரமாகத் தங்கும் வழி.
நியூசிலாந்தில் தொழில் புரிவதற்கான அனுமதிப்பத்திரம்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு: 0773 433696

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

மலர்வு : 05.11.1919 உதிர்வு : 29.01.2007

29.01.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.02.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புலோலி தெற்கு, புலோலி.

(58425)

குடும்பத்தினர்.

# வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்
# உயர்திரு. சோமசுந்தரம் தில்லைநாதன் J.P. அவர்களின்
# சேவை நயப்பு மலர்

வேலணைக் கோட்டக்கல்வி அலுவலர்

**உயர்திரு.**

**சோமசுந்தரம் தில்லைநாதன் J.P.**

(B.A., Dip. in Edu., SP.Tr.(Primary), SLPS - I)

**சேவை விவரம்**

1) இ/பெல்மதுளை தமிழ் வித்தியாலயம்
உதவி ஆசிரியர் 16.01.1970 - 31.12.1979
2) இ/ஒப்தா அ.த.க. வித்தியாலயம்
உதவி ஆசிரியர் 01.01.1980 - 02.03.1982
3) யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம்
உதவி ஆசிரியர் 03.03.1982 - 19.09.1982
4) யா/ நயினாதீவு ஸ்ரீ கணேச வித்தியாலம்
உதவி ஆசிரியர் 20.09.1982 - 31.12.1988
5) யா/நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்
உதவி ஆசிரியர் 01.01.1989 - 31.10.1990
6) I யா/நயினாதீவு மகா வித்தியாலயம் அதிபர்
II நயினாதீவு கொத்தணிப் பாடசாலைகள் கொத்தணி அதிபர்
(நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு)
III பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறி சிரேஷ்ட விரிவுரையாளர் (N.I.E. தீவக நிலையம்)
01.01.1990 - 24.11.1996
7) நெடுந்தீவு கோட்டக்கல்விப் பணிமனை கோட்டக்கல்வி அலுவலர்
25.11.1996 - 10.01.1999
[illegible]
11.01.1999 - 28.02.2007

## தொடர்ந்தும் கல்வித் தொண்டாற்ற வேண்டும்

சிறந்த ஓர் ஆசிரியரால்தான் அதிபராக, நிர்வாகியாக சிறப்பாகக் கடமையாற்றலாம் என்பதற்கு முன்னுதாரணமானவர் வேலணைக்கோட்டக் கல்வி பணிப்பாளர் திரு.சோ.தில்லைநாதன். ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளுக்கு அக்காலத்திலேயே தேர்ச்சிகள் பலவற்றையும் ஊட்டி நன் மாணாக்கராக்கினார். அதனைத் தொடர்ந்து அவர் மேல் வகுப்பு மாணவர்களுக்கும் கல்வியறிவைப் புகட்டிச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார். இதன் பயனாக கடவுளால் வழங்கப்பட்ட பெறுமதி மிக்க பரிசுதான் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 ஆகும். நயினாதீவு மகா வித்தியாலயத்தில் சிறந்த அதிபராகக் கடமையாற்றி அப்பகுதி மாணவர்கள் சிறந்த சமூகவியல்பினராக உதவினார் என்றால் மிகையாகாது. கஷ்டப் பிரதேசமான நெடுந்தீவில் கோட்டக் கல்விப் பணிப்பாளராகச் சிறப்புறக் கடமையாற்றிய திரு.சோ.தில்லைநாதன், வேலணைக் கோட்டத்திலும் தன் முத்திரையைப் பதித்துள்ளார். அவர் ஓய்வு பெற்றாலும் தொடர்ந்தும் கல்வித் தொண்டாற்றவேண்டும் என்பது கல்விச் சமூகத்தினரின் வேண்டுகோளாகும். ஓய்வுகாலத்திலும் கல்வித் தொண்டாற்றி சிறந்த தேகாரோக்கியத்துடன் கடமையாற்ற வாழ்த்துகின்றேன்.

வே.தி.செல்வரத்தினம்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

## மிக நல்ல மனிதர்

"என்ன விடயமானாலும், எந்தப் பிரச்சினையானாலும் தில்லைநாதன் 'சேர்' இடம் கதைத்தால் நல்லது; அவர் சொல்வது சரியாக இருக்கும்." என்ற அபிப்பிராயம் தீவக கல்வி வலயத்தில் பலரிடம் உண்டு. இவருடன் பழகிய சில மாதங்களுக்குள் இவரின் நற்பண்புகளைக் கண்டு வியப்படைந்தேன். எண்ணத்தால், செயலால் நல்லதையே செய்யவேண்டும் என்று விரும்பியவர். ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக, கோட்டககல்வி அலுவலராக தீவக கல்வி வலய மாணவர்களுடன் தமது சேவையை இணைத்துக் கொண்டவர். வசதியான இடத்தை நாடாது, கல்வித் தேவையுள்ள இடத்தை நாடிச் சேவை செய்தவர். வேலணைக் கோட்டக் கல்வி அலுவலராகக் கடமையாற்றினாலும் ஏனைய எமது கோட்ட மாணவர்களினதும் நலன்களைப் பெரிதாக மதித்தவர். இன்று கல்வி பணிமனையில் இருந்து ஓய்வுபெற்றுவிட்டார். அவர் தமது ஓய்வு காலத்தில் மிக்க மகிழவுடன் வாழவேண்டுமென வாழ்த்தும் பலருடன் நானும் இணைந்து கொள்கின்றேன்.

ஆ.ராஜேந்திரன்,
வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகக் கல்வி வலயம்.

## ஆளுமை மிக்க கல்வி அலுவலர்

தொழில்களில் முதன்மையானதும் போற்றத்தக்கதுமான ஆசிரியத் தொழிலை தெய்வமாகக் கொண்டு தன் பணியை செவ்வனே ஆற்றி தீவக மக்களின் கல்வி முன்னேற்றத்திற்கு அயராது உழைத்து வந்தார். நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் பால மிகுந்த பக்தி கொண்ட இவர் சக உத்தியோகத்தர்களை அன்பாலும், பண்பாலும் கவர்ந்து கொண்டவர். மாணவர்களுக்கு நல்லாசானாய், குருவாய் நின்று வழிகாட்டி நல்வழிப்படுத்தியவர். காலப்போக்கில் தன் திறமையாலும், உழைப்பாலும் உயர்ந்து அதிபராகவும், கோட்டக் கல்வி அலுவலராகவும் உயர்வு பெற்று இன்று தன் சேவையில் இருந்து ஓய்வுபெறும் திரு.சோ.தில்லைநாதன் அவர்களின் சேவை பாராட்டத்தக்கதும் போற்றத்தக்கதுமாகும். அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய புங்குடுதீவு பிரதேச அதிபர்கள் சார்பாக வாழ்த்துகின்றேன்.

க.தர்மகுணசிங்கம்,
அதிபர்,
யா/புங்குடுதீவு ம.வி.

## கல்வியுலகில் ஓர் ஒப்பற்ற சேவையாளன்

தீவக கல்வி வலயத்தின் வேலணைக் கோட்டக் கல்வி அலுவலராக நீண்ட காலம் சேவையாற்றி ஓய்வுபெறும் திரு சோ.தில்லைநாதன் அவர்கள் உயர்ந்த கல்வி ஞானமும் மென்மையான அணுகுமுறையும் வித்தியாசமான நிர்வாகத் திறனும் நிறைந்தவர்.

ஆசிரியராக, அதிபராக, கல்வி அலுவலராகத் தனது சேவையின் நீண்ட காலப் பணியைத் தீவகத்தில் - தான் பிறந்த மண்ணின் மகன் என்ற உணர்வோடு அர்ப்பணித்தவர்.

தீவக இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் உறுப்பினராக இருந்ததுடன் கிளைச் சங்கத்திற்குப் பொருத்தமான வேளைகளில் ஆலோசனைகளையும் ஆதரவையும் தந்தார். ஆசிரியர்கள், அதிபர்கள், ஊழியர்களின் பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் அணுகித் தீர்த்து வைத்த பெருந்தகை.

இவர் தமது ஓய்வு காலத்தில் தேக நலனும் நீண்ட ஆயுளும் பெற்று வாழ வேண்டுமென இறையாசி வேண்டுகின்றேன்.

எஸ்.கே.சண்முகலிங்கம்
செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், தீவக வலயம்.

## கண்ணியம் மிக்க கனவான்

"தில்லைநாதன் சேர்" அவர்களுடன் பழகிய நாள்களும், பகிர்ந்து கொண்ட அனுபவங்களும் என்றும் மனதிற்கு இதந்தருவன. 1996இல் பிறந்த மண்ணுக்காக மீள் திரும்புகையில் பின்னர் ஏற்பட்ட உறவுகளில் நான் மிகவும் விரும்பி நேசிக்கும் மிக அற்புதமான கண்ணியம் மிக்க கனவானாக வாழ்ந்து வருபவர். பல்துறைப் பரிமாணங்களில் எங்களுக்கு வழிகாட்டியவர், எங்களில் ஒருவராக நின்று கல்விக் காலத்தில் பணியாற்றிய ஒரு பண்பாளர். வேலணைக் கோட்டத்தில் மாத்திரமன்றி தீவக கல்விச் செயற்பாடுகளில் உணர்வு பூர்வமாகப் பணியாற்றியவர். புலம்பெயர் காலத்திலும், அதற்குப் பின்னரும் தீவகக் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளில் இவரது பங்கும் பணியும் மிகக் காத்திரமானதாக அமைத்திருந்ததை தீவக மக்கள் மறக்க மாட்டார்கள். எத்தகைய மக்களுக்கு கலவியை வழங்க வேண்டுமோ அத்தகைய பிரதேச மக்களுக்காக பணியாற்றிய செய்தியை இவரது சேவையாற்றிய இடங்களில் இருந்து நாம் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. இவருடைய கலவிப் பணிக்கு இது ஓர் உரைகல்லாக அமைந்துள்ளது. இத்தகைய பண்பாளர்கள் எமது கல்விப்புலத்தில் இருந்து ஓய்வு பெறுவது இட்டு நிரப்ப முடியாத இடைவெளியாகவே இருக்கும். ஓய்வுகாலம் நலமாக, வளமாக, மகிழ்வாக அமைய வேண்டும் என்று எல்லாம் வல்ல நயினை நாகேஸ்வரித் தாயை வணங்கி வாழ்தி மகிழவடைகின்றோம்.

வேலணைப் பிரதேச அதிபர்கள் சார்பாக
பொன்னம்பலம் அருணகிரிநாதன்,
அதிபர், வேலணை மத்திய கல்லூரி.

## இருளான காலத்தில் ஒளி ஏற்றியவர்

உயர் திரு சோ.தில்லைநாதன் அவர்கள் ஆசிரியராக உபஅதிபராக, அதிபராக, கொத்தணி அதிபராக, கோட்டக் கல்வி அதிகாரியாக உயர் பதவிகள் வகித்து ஓய்வு பெறும் இந்நாளில் சேவை நலன் பாராட்டி பத்திரிகைக்கு வாழ்தத்ச் செய்தி அனுப்புவதில் நயினாதீவு மகாவித்தியாலய கல்விச் சமூகத்தின் சார்பில் மகிழ்ச்சியடைகின்றேன். எமது கிராமத்தின் மூன்று பாடசாலைகளிலும் கடமையாற்றியவர். சிறந்த மென்பந்தாட்ட வீரன். கொத்தணி முறை இருந்த காலத்தில் அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய தீவுகளின் பாடசாலைகளைச் சிறந்த முறையில் நிர்வகித்தவர். தீவகம் குடாநாட்டுடன் தொடர்பு அற்ற காலத்தில் கல்விப் பணிப்பாளர் இரா.சின்னத்தம்பியுடன் இணைந்து தீவகத்தில் அப்போது இருந்த 5000 மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு ஊக்கம் அளித்தவர். அதனால் இன்று பலர் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரிகளாகவும் ஆசிரியர்களாகவும் மற்றும் பல தொழில்துறைகளிலும் உள்ளார்கள். அத்துடன் அப்போது தீவகத்தில் பட்டப்பின் கல்வி பணிப்பாளர் இரா.சின்னத்தம்பியுடன் இணைந்து தீவகத்தில் அப்போது இருந்த 5000 மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு ஊக்கம் அளித்தவர். அதனால் இன்று பலர் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரிகளாகவும் ஆசிரியர்களாகவும் மற்றும் பல தொழில்துறைகளிலும் உள்ளார்கள். அத்துடன் அப்போது தீவகத்தில் பட்டப்பின் கல்வி கற்க முடியாது இருந்த 40 பட்டதாரிகளுக்காக நயினாதீவு மகாவித்தியாலயத்தில் இரா.சின்னத்தம்பி கல்விப்பணிப் பாளருடன் இணைந்து விசேடமாக தேசிய கல்வி நிறுவனத்தின் அனுமதியுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கல்வி நிலையம் ஒன்றை உருவாக்கி மாணவர்கள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கல்வி பூர்த்தி செய்யப் பெரும் பங்காற்றியவர். தற்போது நயினாதீவு கிராமத்தில் உள்ள கல்விச் சமூகத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு இவருக்குரியது.

நயினாதீவு பிரதேச அதிபர்கள் சார்பில் செல்லையா பகீரதன்,
அதிபர், யா/நயினாதீவு ம.வி.

## தன்னலம் கருதாதவர்

அன்பும் பண்பும் நிறைந்த மதிப்பார்ந்த வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இன்று ஓய்வுபெறும் உயர்திரு சோ.தில்லைநாதன் அவர்கள் தீவக வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் மகத்தானவை. இந்நாளில் வெளிவரும் சேவை நயப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்

குறிப்பாக தீவகம் யாழ்.நகருடன் துண்டிக்கப்பட்ட காலத்தில் நயினாதீவு மாணவர்களுக்கு சிறந்த ஆசிரியராக, அதிபராக, வழிகாட்டியாகத் தொழிற்பட்டு பொதுப்பரீட்சைகளையெல்லாம் உரிய காலத்தில் நடத்தி சீரிய பணியாற்றியவர். நெடுந்தீவுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பொறுப்பையும் சந்தோஷமாக ஏற்று நற்பணியாற்றியவர்.

தீவக வலயம் 1996இல் ஆரம்பித்தவேளையில் முக்கிய துண்களில் ஒருவராக இவர் திகழ்ந்துள்ளார் என்றால் அது மிகையாகாது. நெடுந்தீவு, நயினாதீவுப் பாடசாலை மேற்பார்வைக்குச் சென்றபோது பல இரவுகளை நாம் இவருடன் கழித்திருக்கின்றோம். இந்நாள்களில் இவருடைய விருந்தோம்பல் பண்பு எமைம வியப்பில் ஆழத்தும். இவருடைய சுவாரஸ்யமான கதைகளுடாக எமக்குப் பொழுது போவதே தெரிவதில்லை.

வேலணைக் கோட்டக் கல்விக் கோட்டத்திலும் அனைத்து நிகழச்சிகளையும் உரிய காலத்தில் நடத்தி அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் மத்தியில் நன்மதிப்பினைப் பெற்றவர். தனது குடும்ப நலனைக் கருதாது தீவகத்திலேயே தொடர்ந்து பணியாற்றிய இவருக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவினால் வயது வரு முன்னரே ஓய்வுபெறுவது தீவகக் கல்வி வளர்ச்சிக்குப் பேரிழப்பாகும். நயினை நாகபூசணியின் அருட்கடாட்சத்தினால் இவர் பூரண குணமடைந்து மனைவி, மக்களுடன் நீண்ட காலம் பல சிறப்புகளுடன் வாழ அம்பிகையின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

ப.விக்னேஸ்வரன்,
வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம், மருதனார்மடம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.நா.: 222 9944

## மட்டக்களப்புச் சம்பவம் வெளிப்படுத்தும் உண்மைகள்

மட்டக்களப்பில் இராஜதந்திரிகள் உட்பட சில அதிகாரிகளை ஏற்றிவந்த ஹெலிக்கொப்டர் நேற்றுக் காலை தரை இறங்கிய சமயம் நேர்ந்த அனர்த்தம் பலத்த சர்ச்சையையும் வாதப்பிரதிவாதங்களையும் உருவாக்கியுள்ளது.

இந்த விவகாரத்தை ஒட்டி, காலதாமதம் செய்யாமல் தமது தரப்பு நிலைப்பாட்டைத் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தியிருப்பது ஒரு நல்ல அம்சமே.

இந்தத் தாக்குதலைத் தாங்களே நடத்தியிருக்கின்றார்கள் என்பதை விடுதலைப் புலிகள் ஒப்புக்கொள்ளத் தவறவில்லை.

இவ்விவகாரத்தை ஒட்டி விடுதலைப்புலிகளும், இலங்கை அரசுத் தரப்பும் மாறி மாறி ஒருவர் மீது ஒருவர் சுமத்தும் குற்றச்சாட்டுகள் பெரும் இராஜதந்திர சர்ச்சைகளுக்கு வழிவகுக்கக் கூடும்.

இந்தச் சம்பவத்தின் விளைவு இராஜதந்திர ரீதியிலும், போரியல் நடவடிக்கைப் போக்கிலும் எத்தகைய பெறுபேறுகளை - அல்லது பிரதிபலன்களையோ, பாதிப்புக்களையோ - தரப்புகளுக்கு ஏற்படுத்தப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

ஆனால் இந்தச் சம்பவம் சில அடிப்படை உண்மைகளைத் தெளிவுபடுத்தத் தவறவில்லை என்பதையும் நாம் நோக்கவேண்டும்.

கிழக்கின் பெரும் பகுதியை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துவிட்டோம், அவர்களைத் தொப்பிகலைக் காட்டுக்கு அப்பால் விரட்டியடித்துவிட்டோம் என்றெல்லாம் தென்னிலங்கை மார்தட்டி வரும் பின்னணியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

அதுவும் மட்டக்களப்பு நகரை அண்டி - விமானப்படையின் பிரதான தளத்தின் மூல மையப் பிரதேசமான விமான ஓடுபாதைப் பகுதி மற்றும் மட்டக்களப்பு நகரின் மையத்தில் உயர் பாதுகாப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள வெப்பர் விளையாட்டரங்கு ஆகியவற்றை - குறிதவறாது இலக்குவைத்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

இத்தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டது 122 எம். எம். ரக ஷெல்கள் என இராணுவ வட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை, காரடியனாறு மற்றும் அம்பாறை மாவட்டத்தின் அண்டிய சில பிரதேசங்கள் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இன்னும் தொடர்ந்து இருந்து வருகின்றன.

புலிகளின் மைய நிலையமான வன்னிப் பெருநிலப்பரப்புடன் பாதுகாப்பான தரைவழிப் பாதையோ, கடல்வழித் தொடர்போ அற்ற நிலையிலும் இப்பிராந்தியத்தில் கணிசமான பிரதேசம் இவ்வாறு புலிகளால் தொடர்ந்து தக்கவைக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கக்கூடிய 122எம்.எம். மோடடார் ஷெல்களின் பொதுவான - அதிகூடிய - வீச்செல்லை 17 கிலோ மீற்றராகும். அப்படியானால், கொக்கட்டிச்சோலையில் இருந்தோ அல்லது அதை அண்டிய பிரதேசம் ஒன்றிலிருந்தோ மட்டக்களப்பு விமானத் தளத்தின் மையத்தை இலக்கு வைத்து இந்தத் தாக்குதலைப் புலிகள் நடத்தியிருக்கக்கூடும்.

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் முடிவுகட்டி, அதன் மூலம் இனப்பிரச்சினையை அடக்கி, ஒடுக்கும் எண்ணம் கொண்டிருக்கும் தென்பகுதித் தீவிரப் போக்காளர்களுக்கு இச்சம்பவம் ஒரு செய்தியை எடுத்தியம்பத் தவறவில்லை.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் சில தினங்களுக்கு முன்னர் தெளிவுபடுத்திய செய்திதான் அது.

*"சிங்களப் பெரும்பான்மையினரைக் கொண்ட தென்னிலங்கை, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியம் என உணர்கிறது. ஆனால் நான் அந்தக் கருத்துடன் உடன்படவில்லை. தமிழ் சமூகத்தின் நியாயமான ஆதங்கங்களைக் கவனத்தில் கொள்ளும் சமாந்தர அரசியல் தந்திரோபாயம் இல்லாமல் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியாது.*

*"இராணுவத் தீர்வு சாத்தியமாகும் என நாம் நம்பவில்லை. பயங்கரவாத முறைகளைப் பயன்படுத்தித் தாக்குவதில் புலிகளுக்குக் குறிப்பிடத்தக்க வலிமை உண்டு. அதை நாம் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது."*

- இவ்வாறு அமெரிக்கத் தூதுவர் சில தினங்களுக்கு முன்னர் கூறியவை, நிஜமாகவே அவரது கண் முன்னால் ஏனையோருக்கு ருசுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

பயங்கரவாத முறையில் அல்லாமல், அரச படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள விமானப் படையின் மையத்தளத்தின் மீது - இராணுவ இலக்கு மீது - மரபு ரீதியான யுத்தத் தாக்குதல் நடவடிக்கை முறை மூலம் தமது வலிமையை இச்சந்தர்ப்பத்தில் புலிகள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

பிரதேசங்களைப் புதிது புதிதாகக் கைப்பற்றி, வழமை நிலையை ஏற்படுத்தி வருகிறோம் என்று சர்வதேச சமூகத்துக்கு தென்னிலங்கை போடும் படத்தின் நம்பகத்தன்மை எத்தகையது என்பதை சர்வதேச சமூகம் நேரில் கண்டறிவதற்கு இந்தச் சம்பவம் ஒரு சந்தர்ப்பமாக அமைந்திருப்பதையும் நாம் அவதானிக்கலாம்.

பல முக்கிய நாடுகள், தமது இராஜதந்திரிகள் தங்களது நேரடி அனுபவத்தின் அடிப்படையில் தெரிவிக்கும் கருத்துக்களை வைத்துக்கொண்டு உண்மை நிலையை மதிப்பீடு செய்ய இது ஒரு வாய்ப்பையும் தந்திருக்கின்றது.

பெறுமதியும், மதிப்பும், கௌரவமும், கீர்த்தியும் கொண்ட இராஜதந்திரிகளின் உயிர்களுக்கு உலை வைக்கக்கூடிய ஆபத்துமிக்க இந்தச் சம்பவம் இடம்பெற்றமை சகல்ரையும் பொறுத்தவரை துரதிஷ்டவசமானதே.

ஆனாலும் கள நிலையின் யதார்த்தத்தை - மெய்யுண்மை நிலையை - வெளிப்படுத்தும் ஒரு வாய்ப்பை அது தந்திருப்பதும் மறுக்கக் கூடியதல்ல.

# யாழ். இந்துக் கல்லூரிப் பகுதியில் நேற்று படையினர் பெரும் எடுப்பில் தேடுதல்

யாழ்ப்பாணம், பெப்.28

யாழ். இந்துக்கல்லூரி மற்றும் அதன் சுற்றாடல் பகுதிகள் நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பெரும் தேடுதல் இடம்பெற்றது.

கஸ்தூரியார் வீதி, சிவலிங்கப் புளியடி, மனோகராச் சந்தி, இந்து மகளிர் கல்லூரி வீதி உள்ளிட்ட பகுதிகள் ஊடாகப் பொது மக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள், ஆசிரியர்களும் பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட வில்லை என்றும் -

சுற்றிவளைப்புக்கு முன்னர் சென்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கல்லூரி மைதானத்தில் வெய்யிலில் நீண்ட நேரம் நிறுத்தப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு அந்தப் பகுதியில் வேட்டுச் சத்தங்கள் கேட்டன என்றும் -

அதனையடுத்தே நேற்றுக் காலை முதல் தேடுதல் இடம்பெற்றது என்றும் - கூறப்பட்டது.

காலை 8 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட சோதனை நடவடிக்கை முற்பகல் 11 மணிவரை இடம் பெற்றது என்றும் அறியவந்தது.

**கிரனேட் மீட்பு**

இதேவேளை, இந்துக்கல்லூரிப் பகுதிக்கு அண்மையில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்று முன்தினம் இரவு கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தேசியப்பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்திருக்கிறது.

இந்தத் தாக்குதலையடுத்து படையினரும் பதில் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். அதனைத் தொடர்ந்து படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் கிளைமோர்க் குண்டு -01, கைக்குண்டு -01, ரி-56 ரகத்துப்பாக்கி -01 ஆகிய ஆயுதங்கள் மீட்கப்பட்டன எனவும் தேசிய பாதுகாப்பு ஊடகநிலையம் மேலும் தெரிவித்தது.

பிற்பகல் இரண்டு மணியளவில் மோப்பநாய்கள்சகிதம் பாடசாலைப் பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டது.

காலையில் பாடசாலைக்கு வந்த மணாவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதாகப் பொற்றோர்கள் தெரிவித்தனர். (அ-1-4-88-68)

## பத்தாயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்ட குழந்தை குறித்த விடயம் நேற்று நீதிமன்றத்துக்கு

யாழ்ப்பாணம், பெப்.28

பருத்தித்துறை, அல்வாய் பகுதியில் மூன்று வயதுக் குழந்தை ஒன்றை 10 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படும் அவரது தந்தை உட்பட நால்வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் க. அரியநாயகம் உத்தரவிட்டுள்ளார்.

மூன்று வயது நிரம்பிய யோகேஸ் வரன் கஜன்ராஜ் என்ற குழந்தையை பத்தாயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்தமை தொடர்பான விசாரணை நேற்றுப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

பிரஸ்தாப குழந்தையை தந்தை 10 ஆயிரம் ரூபாவுக்கு ஒருவருக்கு விற்றுள்ளார் என்றும் அக்குழந்தை 4,5 பேர்களிடம் கைமாறி அடித்துத் துன்புறுத்தப்பட்டு, வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டிருந்ததாகவும் நீதிமன்றத்தில் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கைது செய்யப்பட்ட குழந்தையின் தந்தையான நாதன் யோகேஸ்வரன் மற்றும் சந்திரகுமார் ஜெயம், தி. ஜெயக்கொடி, சி. மாசிலாமணி ஆகியோர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டார்.

ஏற்கனவே இக்குழந்தை சிறுவர் பாதுகாப்புக் குழுவால் பெறுப்பேற்கப்பட்டிருந்தது. (அ-1-202)

# ஒருவார காலமாகத் தொடர்கிறது குடாக்கடல் மீன்பிடித் தடை

## 18,000 மீனவக் குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாகச் சுமார் 18 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

மீனவர்கள் தமது தொழிலை கடந்த ஒரு வாரகாலமாக முற்றாக இழந்துள்ளமையால், அவர்களது குடும்பங்களின் அன்றாடச் சீவியம் கேள்விக் குறியாகியுள்ளதாகவும் இதுவரை அவர்களுக்கு உலர் உணவு நிவாரணத்தைத் தவிர வேறு உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் சமாசப் பிரிதிநிதி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இம்மாதம் 21ஆம் திகதி முதல் குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு முற்றாகத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அங்கு தொழில்புரியும் குடாநாட்டைச் சேர்ந்த 18 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் தமது வருமானத்தை முற்றாக இழந்துள்ளன.

மீன்பிடித் தொழிலுக்கு அடிக்கடி விதிக்கப்படும் தடை காரணமாக மீனவர்கள் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். தற்போது மீனவக் குடும்பங்களின் நிலை மிகவும் பரிதாபகரமானதாக உள்ளது.

தற்போது விதிக்கப்பட்டுள்ள மீன்பிடித்தடையை நீக்குவது தொடர்பாக உரிய தரப்பினரிடம் இருந்து இதுவரை எந்தவொரு சுமுகமான பதிலும் கிடைக்கவில்லை. எப்போது தடை நீக்கப்படும் என்று எதிர்பார்த்து பெரும் அங்கலாய்ப்புடன் உள்ளனர். (அ-8)

## பேராதனை பல்கலை. பொறியியல் மாணவருக்கு

யாழ்ப்பாணம். பெப்.28

புதிய கல்வியாண்டுக்கு பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கு யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவான 32 மாணவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளன.

தெரிவான மாணவர்களின் விவரங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கற்கை நெறிக்குத் தெரிவான மாணவர்களுக்கு கப்பல் போக்குவரத்தில் முன்னுரிமை வழங்கும்படி பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடம் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுள்ளது என்றும் அறியவந்தது.

பொறியியல் பீடத்துக்குத் தெரிவான மாணவர்களின் விவரங்களை உதயன் அலுவலகத்தில் பார்வையிடலாம். (அ-1)

## ராஜதந்திரிகளின் உயிர்களைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிச்செல்லும் வகையில் அவர்களின் பாதுகாப்பில் கவனயீனமாகவும் பொறுப்பற்ற விதத்திலும் அரசு செயற்பட்டிருப்பது எமக்குப் பேரதிர்ச்சியைத் தருகின்றது.

**நேரத்துடன் அறிவித்திருக்க வேண்டும்**

"யுத்தப் பிரதேசங்களுக்கு வெளிநாட்டு இராஜதந்திரிகளோ அல்லது அரச சார்பற்ற தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளோ விஜயம் செய்யும் சமயங்களில் அது குறித்துப் புலிகளுக்கு நேரத்துடன் தெரியப்படுத்தும் ஓர் ஏற்பாடு நடைமுறையில் இருந்து வருகின்றது.

"அத்தகைய அதிகாரிகள் மற்றும் அவர்களுடன் சேர்ந்தவை பற்றிய விவரங்கள், ஐ.நா. மற்றும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுடன் தொடர்பு பட்டுப்பணியாற்றும் புலிகளின் தொடர்பாளருக்கு அறிவிக்கப்படுவதே வழமை. மட்டக்களப்பில் இந்த ஏற்பாட்டை இலங்கை அரசின் இராணுவக்கட்டமைப்பு வெறுமனே உதாசீனம் செய்து விட்டது.

"இந்த மிக எளிய நடைமுறை மட்டக்களப்பில் இலங்கை இராணுவத்தால் வேண்டுமென்றே உதாசீனம் செய்யப்பட்டிருக்கின்றது.

"வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் சர்வதேச சமூகத்துடனான புலிகளின் உறவை சீர்குலைப்பதற்கு முயலும் இலங்கை அரசின் செயற்பாட்டை மிகக் கடுமையாக நாம் கண்டிக்கிறோம்.

"முழு மட்டக்களப்பு மாவட்டத்திலும் தன்பாட்டில் யுத்தம் ஒன்றைப் பிரகடனப்படுத்தி, அதை முன்னெடுத்து வரும் இலங்கை இராணுவம், இவ்விடயத்தில் உரிய நடைமுறையைக் கடைப்பிடிக்கத் தவறியதன் மூலம் கிரிமினல் குற்றம் ஒன்றையும் புரிந்திருக்கின்றது" - என்றும் இளந்திரையன் மேலும் தெரிவித்திருக்கின்றார். (உ)

## ராஜதந்திரிகளை ஏற்றிச்சென்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசம். விசேட அதிரடிப் படை, மற்றும் இராணுவ முகாம்களால் சூழப்பட்ட இடம். அமைச்சரின் வருகையை முன்னிட்டு ஏற்கனவே பலத்த பாதுகாப்பு முன்ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்தச் சமயத்திலேயே புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். வவுணதீவுக்கு மேற்கில் இருந்தே புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சமரசிங்கவுடன் சென்ற குழுவில்: ஊடகப் பிரிவைச் சேர்ந்த மூவர் அமைச்சின் உயர் அதிகாரிகள் ஏழுபேர், ஐ.நா. அதிகாரிகள் இருவர், இராஜதந்திரிகள் மற்றும் யுனிசெவ் அதிகாரிகள் 9 பேர் உட்பட 22பேர் இடம்பெற்றிருந்தனர் என இடர் முகாமைத்துவ அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

**அமெரிக்கத் தூதுவர் உடன் [illegible]**

அமெரிக்கத் தூதுவர் றொபேட் [illegible] வரவேண்டியவர்கள் என ஆரம்பத்தில் கூறப்பட்ட போதிலும் அவருக்கு எவ்விதமான பாதிப்பும் இல்லை. அவர் உடனடியாக கொழும்பு திரும்பிவிட்டார் என அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்தவர்களுள் முக்கியமானவர் இத்தாலிய நாட்டு தூதுவர் ரியோ மரியாணி. இவருக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. சிறு காயம் என்றாலும் தலையில் ஷெல் சிதறல் தாக்கி இருப்பதால் மேலதிக சிகிச்சைக்காக அவர் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, காயமடைந்த 10 படையினரில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 3பேர் அம்பாறை வைத்தியசாலைக்கும் பொலிஸ் மற்றும் விமானப்படையைச் சேர்ந்த 7பேர் பொலன்னறுவை வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பாரதூரமான காயங்கள் எதுவும் இல்லை என்ற போதும் அவர்களுடைய வேண்டுகோளின் பேரில் பாதுகாப்பு காரணங்களுக்காவே இவர்கள் பொலன்னறுவை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சயன் ஒளிபவன் தெரிவித்தார். (ஐ-1)

## நாளை

மாசி - 17
வியாழக்கிழமை
01.03.2007
திதி: திரயோதசி
பின்னிரவு : 02.53
நட்சத்திரம் : பூசம்
பிற்பகல் [illegible]
சுபநேரம் : 07.58 - 09.28
ராகுகாலம் : 01.58 - 03.28

## குடாநாட்டின் பிரதேச செய்திகள்

### கைவிடப்பட்ட பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதிப்பிரிவு ஊழியர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். எனினும், காலையில் தொடங்கிய பகிஷ்கரிப்பு பிற்பகலில் கைவிடப்பட்டது.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் கடைசி பஸ் 4 மணிக்கு புறப்படும் நிலையில், தங்களை 4.45 மணிக்குப் பின்னர் கடமை முடிந்து செல்ல வலியுறுத்துவதாகத் தெரிவித்து இந்த பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நிதிப் பிரிவு தவிர்ந்த ஏனைய பகுதிகளின் ஊழியர்கள் தூர இடத்தில் இருந்து வருவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தமக்கு மட்டும் இத்தகைய சலுகை இல்லையெனவும் அவர்கள் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து பல்கலைக்கழக ஊழியர் தொழிற் சங்கத்தினர் பதிவாளருடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து பதிவாளர் மற்றும் துறைத் தலைவர் ஆகியோரின் முன் அனுமதிபெற்றுச் செல்லலாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பகிஷ்கரிப்பு பிற்பகல் 2 மணியளவில் கைவிடப்பட்டது. (1-4-88-68)

### கப்பல் பயணப் பதிவுகள் இடைநிறுத்தம்

கப்பல் போக்குவரத்துக்கான புதிய பதிவுகள் மறு அறிவித்தல் வரை மேற்கொள்ளப்படமாட்டா.

அரசாங்க அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

கப்பல் பயணத்துக்கு செயலகத்தில் ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டவர்களின் பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதால் புதிய பதிவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### தென்மராட்சி அதிபர்களுக்கு இன்று கலந்துரையாடல்

தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்தார். (1-202)

### தெற்குப் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களுக்கு இன்று பயணப் பதிவு

யாழ். மாவட்டத்தில் இருந்து தென். பகுதிப் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாகி அங்கு செல்ல விருக்கும் மாணவர்களுக்கான பயணத்துக்குரிய பதிவுகள் இன்று காலை 9 மணி தொடக்கம் யாழ். செயலகத்தில் நடைபெறும்.

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களை உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

மாணவர் ஒவ்வொருவருடனும் பெற்றோர்கள் செல்லவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (அ-1)

### திடீரென மறைந்த எரிபொருள் நிலையங்கள்

யாழ். நகரப் பகுதியின் முக்கிய வீதிகளில் கடை கட்டியிருந்த குட்டி எரிபொருள் விற்பனை நிலையங்கள் பலவும் நேற்றுத் திடீரென மறைந்து போய்விட்டன.

பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தினரால் அங்கீகாரம் பெற்ற முகவர்கள் மட்டுமே எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்ளமுடியும் என்ற யாழ். அரச அதிபரின் அறிவிப்பையடுத்தே இந்த மாற்றம் நிகழ்ந்தது.

பெற்றோல், மண்எண்ணை போன்றவற்றை விற்பனை செய்து வந்த நடைபாதை வியாபாரிகள் பலர் தமது கடைகளை மூடியிருந்ததைக் காணமுடிந்தது.

எனினும் புறநகர் பகுதிகளில் உள்ள சில வீதிகளில் முன்னர் போலன்றி மிகக் குறைந்த அளவு போத்தல்களில் பெற்றோல், மண்எண்ணை ஆகியவற்றைச் சிலர் விற்பனைக்காக வீடுகளின் முன்பாக வைத்திருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. (1-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைநலன் பாராட்டும் வாழ்த்தும்

நண்பனாய்.....
மந்திரியாய் .....
நல்லாசானுமாய்.....

எமது பாடசாலையில் கடந்த 30 வருட காலமாக எம்முடன் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் நிறைவான சேவையை ஆற்றி ஓய்வுபெறும்

திருமதி
**ஜெகதீஸ்வரி சிவசண்முகராஜா**

அவர்களைப் பல்லாண்டு காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை.

(58476)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

நவாலியூர் திருமதி
**செல்வராஜா செல்வராணி**

மலர்வு 11.06.1945 உதிர்வு 29.01.2007

புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராஜா செல்வராணி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மூத்தவிநாயகர் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

(58447)

க.கந்தசாமி
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**கந்தையா பத்மநாதன்**

பிறப்பு 17.10.1943
இறப்பு 29.01.2007

திதி:28.02.2007

அப்பா!
அண்ணாவை இழந்தோம்
ஆசைத் தம்பியையும் காணவில்லை
இப்போது உங்களையும் இழந்து
தவிக்கின்றோம்.

5,ஒடை லேன்,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

(58477)

மனைவி,மகன்மார்,
மருமகள்,பேரன்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் அன்னபூரணம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சுப்பிரமணியம் அன்னபூரணம் 25.02.2007 அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - நாகமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் நமசிவாயம் (அமரர்), அமிர்தலிங்கம்(அமரர்), அன்னலட்சுமி(கனடா) ஆகியோரின் சகோதரரும் சிதம்பரேஸ்வரி (நியூசிலாந்து), செல்வேஸ்வரி (கொக்குவில்), உதயநேசன்(கனடா), செல்வநேசன்(ஆசிரியர், கொழும்பு), ஆனந்தசொரூபி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் தர்மலிங்கம்(நியூசிலாந்து), யோகேந்திரராசா(கொக்குவில்), செல்வி(கனடா), சுமதி(ஆசிரியர், கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி), அமிர்தராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.03.2007 வியாழக்கிழமை பிரான்சில் அவரது இல்லத்தில் நடைபெறும் அதேவேளையில் அன்னாரின் இல்லத்தில் பிள்ளையார் கோயிலடி வடலியடைப்பில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
வடலியடைப்பு.

தகவல்: க.தெய்வேந்திரம் (பெறாமகன்),
தேநீர் கடை, சங்கானை. (வடலியடைப்பு)

### மடுத்தின் சிங்கராயர்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம், ஆனைக்கோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தீன் சிங்கராயர் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மடுத்தீன் - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும் அருளம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சாமிநாதர், அருளப்பு, அன்னம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற ரஞ்சிதம், லீனஸ்யோசப் (இத்தாலி), மரியதாஸ், தேவி, ராணி, ஜெயபால் (லண்டன்), சுசிலா (கனடா), சரோஜினி (ஜேர்மனி), ஜெகநாதன் (ஹொலண்ட்), ஜெனிலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாவிலுப்பிள்ளை, ஜெயந்தி, சாந்தி, கலிஸ்ரன், புனிதா, அன்ரன், பற்றிக், விஜயராஜன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.02.2007) புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மண்டைதீவு புனித பேதுறுவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
T.P.:0775390079

தகவல்:
மனைவி

## ஊரடங்கு நேரம்

யாழ்ப்பாணம், பெப்.28

குடாநாட்டில் சகல பகுதியிலும் ஊரடங்கு இரவு 7 மணிமுதல் அதிகாலை 5 மணி வரை நடைமுறையில் இருக்கும் என யாழ். படைகளின் தலைமையகம் அறிவித்துள்ளது.

மறு அறிவித்தல்வரை இந்த நடைமுறை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என பலாலி ஊடகத் தகவல் நிலையம் நேற்றிரவு தெரிவித்தது. (அ-1)

## மரண அறிவித்தல்கள்

### அருளப்பு துரைசிங்கம் (பெனடிற்)

(ஓய்வுபெற்ற ஊழியர் - புகையிரத நிலையம்)

சென்பீற்றர்ஸ் வீதி, நவாலி தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு துரைசிங்கம் 25.02.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (28.02.2007) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.பீற்றர்ஸ் வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### சூசை தேவசகாயம்

புதுவீதி, கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் 14/2, பிளர்ச்சஸ் ஒழுங்கை, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சூசை தேவசகாயம் 27.02.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசை, எலிசம்மாவின் அன்பு மகனும் சூசைப்பிள்ளை, ஞானம்மாவின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அருளப்புவின் சகோதரனும் மேரிநவத்தின் அன்புக் கணவரும் மேரிசசிகலா, மில்ரன்சசிக்குமார், மேரி கலிஸ்ரா ஆகியோரின் தந்தையும் போல் யோகராஜா, றெஜினோல்ட் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மேரிநவம் (மனைவி)
14/2, பிளர்ச்சஸ் ஒழுங்கை,
சுண்டுக்குளி


## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts upto 15.03.2007.

### FACULTY OF MEDICINE

Lecturer(on contract) in Anatomy/ Biochemistry / Physiology/ Community Medicine

| Post | Salary Scale |
|---|---|
| Lecturer (on contract) | Rs.26,900/- p.m.(fixed) |

**Note**

Applications will be entertained from candidates holding **MBBS, BDS** or **BVSc** Degree.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments, University of Jaffna, SriLanka, either in person or by post on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23x10 cm in size.

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/ Government Departments/Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR.
UNIVERSITY OF JAFFNA,
SRILANKA.


## மரண அறிவித்தல்கள்

### சிவகொழுந்து சிவசுந்தரம்

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவகொழுந்து சிவசுந்தரம் நேற்று (27.02.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

### சிவஞானம் சிவநாதன்

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், கட்டடத் திணைக்களம், யாழ்ப்பாணம்)

சுதுமலை மேற்கைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் சிவநாதன் 26.02.2007 திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - தங்கம் தம்பதியரின் மகனும் காலஞ் சென்றவர்களான செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் செல்வமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவசுந்தரியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவமூர்த்தியின் மைத்துனரும் சிவமயம்(ஜேர்மனி), சிவலிங்கம் **(Dinesh Bake House Manipay)** ஆகியோரின் தாய் மாமனும் சிவாஜினி (கொமர்சல் வங்கி, கொழும்பு), செல்வகுமார் (நியூசிலாந்து), சூரியகுமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் **Dunstan Prince (Telecom - Colombo)**, மாலதி (நியூசிலாந்து), ரோகினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும் **Dilan, Roshelle, Vithusa, Visala, Joylyn** ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28.02.2007) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சிவலிங்கம்
(தினேஸ்வெதுப்பகம்,மானிப்பாய்)

48, விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

(58470)

### திருமதி விசாலாட்சி சதாசிவம்

கட்டுவன், மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் குரும்பசிட்டி மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது உடுவில் வீதி, மருதனார்மடத்தில் வசித்தவருமான திருமதி விசாலாட்சி சதாசிவம் நேற்று(27.02.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் சதாசிவத்தின் (சாமியார்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சற்குணதேவி மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் தம்பிப்பிள்ளை, பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய தொலைத்தொடர்பு பொறியியலாளர் -முகாமையாளர் - ஸ்ரீலங்கா ரெலிக்கொம்), நடராசா யோகராசா (இளைப்பாறிய ஆசிரியரும் , கல்லு ஆலை உரிமையாளரும்) ஆகியோரின் பாசமிகு மாமியும் திருமதி பகீரதி சிவகுமார் (கனடா), திருமதி பாலபாரதி,மோகனதாஸ்(கனடா), பகீரதன், சிவப்பிரியா(வவுனியா), திருமதி தாரிணி ஆனந்தன் (பாபு - இந்தியா), திருமதி தனுயா சுகாந் (லண்டன்), நந்தகோபன் (சிங்கப்பூர்) ஆகியோரின் பேர்த்தியும் றோயான், சஹானா, கௌசிகா, மாதங்கி, சுவேதா, சூர்யா, அனோஜ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மருதனார்மடத்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று(28.02.2007)புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'மாமல்லபுரம்'
உடுவில் வீதி,
மருதனார்மடம், சுன்னாகம்.
தொ.பே.: 0776669988

(58473)

தகவல்:
கே.ஜே.பாலசுப்பிரமணியம்,
என்.யோகராசா (மருமக்கள்),
யோ.சகுந்தலாதேவி (மகள்)

### திருமதி ஆன்கிறேஸ் பிறாஸ்பிள்ளை (பொன்றோஸ்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஆன்கிறேஸ் பிறாஸ்பிள்ளை 26.02.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேல்பிள்ளை - பார்பரா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற பிறாஸ்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரேசம்மா மற்றும் ஜோசபின் (அம்மா ரீச்சர்), றெஜீனா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜசிந்தா, மணி, ஜீவா, கொன்சி ஆகியோரின் பாசமிகு தாயும் ஸ்ரனிஸ்லாஸ்,ராஜேந்திரம், விஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஸ்பெல்வின், தர்சனா, டெல்வின், வினோத், யூடி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.02.2007) புதன்கிழமை காலை 8மணிக்கு அவரது வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

187, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

(58478)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தெய்வநாயகி அரசதுங்கம் (ஈஸ்வரி)



மலேசியாவைப்பிறப்பிடமாகவும் நீதிமன்ற ஒழுங்கை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அரசதுங்கம்தெய்வநாயகி (ஈஸ்வரி) நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை அரசதுங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நல்லையா - இராசம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி சுந்தரம்பிள்ளை தம்பதியரின் மருமகளும் ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), அகிலேஸ்வரி(யாழ்.போதனா வைத்தியசாலை), திலகவதி(லண்டன்),வசந்தாதேவி(கனடா),கதிர்காமநாதன்(பிரதேச சபை, மல்லாகம்), யசோதா, கமலக்கண்ணன்(பிரான்ஸ்), ஸ்ரீ உமையாள் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும்ஸ்ரீ கணநாதன், ரகுநாதன், வித்தியாதரன், நடனசிவன், தனமதி, சுபா, துஸ்யந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும் திருமதி கைலாயபிள்ளை, திருமதி முடிசிங்கராஜா, விஜயகுலசேகரி, திருமதி குகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நோர்வேயில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி, மல்லாகம்,
தொ.பே.: 0776179097

(58479)

தகவல்: ஏ.கதிர்காமநாதன்(மகன்),
எஸ்.ரகுநாதன்(மருமகன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரின் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org